Lakeridge Health

மே 15, 2020

அன்புள்ள நண்பர்களே, அயலோரே,




வசந்தகாலம் எப்போதுமே புதுப்பித்தலுக்கான நேரமாகும். இனிவரப்போகும் சில காலத்திற்கு இந்தப் புதிய கொறோனாவைரஸ் முன்வைத்துள்ள ஆபத்தைக் கையாண்டு நாம் புதிய முறைகளில் வாழவும் வேலை செய்யவும் அறிய வேண்டும் என்பதனால் இப்பருவகாலம் இவ்வருடத்தில் விசேட முக்கியத்துவம் கொண்டுள்ளது.

Durham Region டுறாம் பிரதேசத்தில் இந்த வைரஸ் கொண்ட புதிய நபர்கள் கண்டறியப்படும் எண்ணிக்கை சென்ற வாரத்தில் குறைந்துவர நாம் தொடர்ந்து காண்கிறோம். இன்றுவரை Lakeridge Health லேக்றிச் ஆரோக்கிய நிலையத்தில் COVID-19 க்காகச் சேர்க்கப்பட்டவர்களில் 109 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். அதேநேரத்தில் COVID-19 காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள நீண்டகாலப் பராமரிப்பிலும் இளைப்பாறியோர் இல்லங்களிலும் வாழ்பவர்களுக்கும் அவற்றின் அலுவர்களுக்கும் ஆதரவளிக்க அமைப்புப் பங்காளர்களுடன் நாம் தொடர்ந்து செயலாற்றி வருகிறோம்.

தினசரி வாழ்வில் காணப்படும் கட்டுப்பாடுகளை தளர்த்துவதில் ஒரு மெதுவாகச் செல்லும் அணுகுமுறையைக் கையாள்வதே, COVID-19 இலிருந்து நாம் வெற்றிகரமாக மீள்வதற்கான வழி என ஆதாரங்கள் காட்டுகின்றன.

COVID-19 இனது சமூகப் பரவலைத் தடுத்தவாறு மீண்டும் மாகாணத்தைத் திறப்பதற்கு ஆதரவாக, இந்த வாரம் Ontario Government ஒன்ராறியோ அரசு அவசரகால நிலைமையை June ஜூன் 2ம் திகதிவரை நீடித்துள்ளது. பொதுசன ஒன்றுகூடல்கள், உடல்சார் தூரம் பேணுதல் போன்ற தற்போதுள்ள கட்டுப்பாடுகள், வைரஸ் பரவலைக் குறைக்கின்றன என்பதற்கான தெளிவான ஆதாரம் உள்ளது. அவசரகால சட்டங்கள் தொடர்ந்து நடைமுறையிலிருப்பது பாதுகாப்பாகப் பொருளாதார நடவடிக்கையை துரிதப்படுத்த உதவும். பொது ஆரோக்கிய வழிகாட்டல்கள் பின்பற்றப்படுமாயின் May

மே 19ம் திகதியிலிருந்து சில கடைகள், பருவகால வியாபாரங்கள், வேலையிடங்கள், மற்றும் திறந்தவெளி இடங்களும் செயற்பாடுகளும் மீண்டும் திறக்கப்படலாம் எனவும் அரசு அறிவித்திருந்தது.

**இந்த நீண்ட வாரஇறுதியில் பாதுகாப்பாக இருத்தல்**

Victoria Day விக்ரோறியா தின வாரஇறுதியினை ஒன்றாகக் கொண்டாட, பலரும் எதிர்பார்த்திருக்கின்றனர். இவ்வருடம் இந்த விடுமுறையை வீட்டில் கடைப்பிடிக்குமாறும், உங்களுடன் வீட்டிலிருப்போர் தவிர்ந்த வெளியிலுள்ளோர் அனைவருடனும் தொலைவிலிருந்தவாறு கொண்டாடுமாறும் நாம் எல்லோரும் கேட்கப்படுகின்றோம். நாம் எல்லோரும் வெளியே சென்று புதிய காற்றையும் சூரியனையும் அனுபவிக்கச் சற்று நேரம் எடுத்துக்கொள்வோம் என எதிர்பார்க்கப்படுகிறது. சமூகம்சார் தூரப்படுத்தலுடன் நடைபயிலுதல், தோட்டவேலை செய்தல், ஏனைய வெளிநிலைச் செயற்பாடுகள் என்பன முழுமையான பாதுகாப்புடையனவாகும்.

சமூகம்சார் தூரப்படுத்தலைக் கடைப்பிடிக்க முடியாத இடங்களில், (உ-ம்: பொதுசன போக்குவரத்து அல்லது பொருட்களைக் கொள்வனவு செய்யும்போது) ஒரு மருத்துவ ரீதியிலற்ற முகக்கவசம் அல்லது வீட்டில் தயாரிக்கப்பட்ட துணி முகக்கவசம் ஒன்றைப் பொது இடங்களில் அணிந்து கொள்வது உங்களுக்கும் மற்றவர்களுக்கும் பாதுகாப்பை வழங்க நீங்கள் எடுக்கக்கூடிய ஒரு மேலதிக வழிமுறையாகும்.

**சத்திரசிகிச்சைகள் மற்றும் செயன்முறைகளை மீண்டும் நேரம்குறிக்கத் திட்டமிடல்**

இந்த COVID-19 பெருநோய்த் தொற்றல் தாக்கமானது சத்திரசிகிச்சைக்குக்கும், மருத்துவ செயன்முறைகளுக்கும் காத்திருப்போருக்குக் குறிப்பாகக் கடினமானதாக இருந்துள்ளது. இந்த வைரஸ் தொற்றினைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர நாம் செயற்பட்ட வேளையில், பிற்போடப்பட்ட அவசரமற்ற சத்திரசிகிச்சைகள், செயன்முறைகளை எவ்வாறு மருத்துவமனைகள் துரிதப்படுத்தத் திட்டமிடலாம் என்பது பற்றிய ஒரு வரைமுறையை, கடந்த வாரம் Ontario Government ஒன்ராறியோ அரசு வழங்கியுள்ளது.

Lakeridge Health லேக்றிச் ஆரோக்கிய நிலையம் தாமதப்படுத்தப்பட்ட பல சத்திரசிகிச்சைகளைக் கரிசனத்துடன் திட்டமிடும் வழியினைத் தற்போது விருத்திசெய்து வருகிறது. இந்தப் புதிய பரிமாணத்தில் நாம் பராமரிப்பையும் சிகிச்சையையும் வழங்கும் போது, எல்லோருடைய பாதுகாப்பையும் உறுதிப்படுத்திக்கொள்ளவென, பல மாதங்கள் கட்டங்கட்டமாக இது செயற்படுத்தப்பட வேண்டியுள்ளது.

COVID-19 க்கு முன்னதான சேவை மட்டங்களை நாம் மீண்டும் அடைவதற்கு காலமெடுத்தாலும், நாம் சரியான திசையில் சென்றுகொண்டிருக்கிறோம். மேலதிக தகவலுக்கு Lakeridge Health லேக்றிச் ஆரோக்கிய நிலையத்தினது இணையத்தளத்தைப் பார்வையிடுங்கள்.

**சமூகத்திற்குள் பராமரிப்பினைக் கொண்டுவருதல்**

Durham Region டுர்றாம் பிரதேசத்திலுள்ள நோயாளர்களுக்கும், குடும்பங்களுக்கும் இப்பெருநோய்த் தாக்கத்தின் போது, விரிவுபடுத்தப்பட்ட எமது மின்வழி ஆரோக்கியத் தீர்வுகள், எமது ஆரோக்கியத் தொகுதியின் நிரந்தர நல்ல விடயங்களையும் வரவேற்புத் தெரிவுகளையும் கொண்டதாக அமையும். இன்றுவரை, Virtual Connections மின்வழி இணைப்புகள் Lakeridge Health லேக்றிச் ஆரோக்கிய நிலையத்திலுள்ள நோயாளர்களுக்கும் அவர்களது அன்புக்குரியோருக்கும் இடையிலான சுமார் 700 தொடர்புகளுக்கு ஆதரவளித்துள்ளது. எமது Virtual Ward மின்வழி சிகிச்சைநிலையத் திட்டமானது வீட்டிலிருக்கும் இன்னொரு 106 நோயாளர்களைக் கண்காணித்து ஆதரவளித்து வருகிறது. மனநலத் தேவைகள் உள்ள எவருக்கும் நிபுணத்துவம் மிக்கதும் தொலைபேசி-வழியானதுமான ஆலோசனைகளையும் ஆதரவையும் வழங்கும் ஒரு Mental Health and Addictions Clinic மின்வழி மனநல மற்றும் அடிமைப்படுதல் சிகிச்சைநிலையத்தை நாம் இந்த வாரம் ஆரம்பித்துள்ளோம். இந்தச் சிகிச்சை நிலையச் சேவையைப்பெற, அழையுங்கள், 1 833-392-7363.

Lakeridge Health லேக்றிச் ஆரோக்கிய நிலையம் நீண்ட-கால பராமரிப்பு வழங்கும் குழுவினருடனும் Canadian Armed Forces கனேடிய ஆயுதப் படையினருடனும் இணைந்து செயற்பட்டு, Orchard Villa ஒர்சர்ட் வில்லாவில் ஏற்பட்ட பாரிய நோய்த் தொற்றலைத் தீர்ப்பதில் தொடர்ந்து முன்னேற்றம் காண்பித்து வருகிறது. அலுவலர்களது எண்ணிக்கை மட்டங்கள் தொடர்ந்து உறுதியாக உள்ளதுடன், நோய்த் தொற்றுக்கெதிரான சிறந்த நடவடிக்கைகளும் நடைமுறையிலுள்ளன. அத்துடன் அந்த இல்லத்தில் பணியாற்றுவோர் எல்லோரும் பொதுசன ஆரோக்கியத் துறையின் வழிமுறைகளைப் பின்பற்றும் முறையில் தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் PPEஐப் பயன்படுத்துகின்றனர். Lakeridge Health லேக்றிச் ஆரோக்கிய நிலையம் Durham டுர்றாமிலுள்ள 16 நீண்டகால-பராமரிப்பு இல்லங்களுக்கு நோய்த்தொற்றுத் தடுப்பு நடைமுறைகள் மற்றும் ஏனைய சிறப்பு நிபுணத்துவங்கள் சார்ந்த ஆதரவினை வழங்கி வருகின்றது.

National Nursing Week, தேசிய தாதியர் வாரத்தை May 11-17 வரையும், Personal Support Worker (PSW) தனிப்பட்ட ஆதரவு வழங்குனர் தினத்தை May 19 தினத்தன்றும் கொண்டாடும் இவ்வேளையில், நோயாளர்களுக்கும், வதிவாளர்களுக்கும், குடும்பங்களுக்கும் அவர்கள் தினமும் வழங்கிவரும் அவர்களது தனித்துவமான

திறன்களுக்கும், நோயாளர்-முன்னிலைப்படுத்திய அணுகுமுறைகளுக்குமென இந்த பெறுமதிமிக்க குழு அங்கத்தினருக்கு நாம் மதிப்பளிக்க விரும்புகின்றோம்.

இந்த நீண்ட வாரஇறுதியின்போது, மேலதிக ஆதரவு தேவைப்படும் சமூக அங்கத்தினருக்கு உதவவென ஒரு கணப்பொழுதை எடுத்துக்கொள்ளுங்கள். அத்துடன் உங்களையும் உங்கள் அன்புக்குரியோரையும் கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள். உங்கள் அறிகுறிகள் பற்றிய கவலை உங்களுக்கு இருப்பின், உங்கள் மருத்துவரைத் தொடர்பு கொண்டு, www.lakeridgehealth.on.ca என்ற இணையத்தளத்தில் உள்ள இணையவழி COVID-19 மதிப்பீட்டுப் படிவத்தைப் பூர்த்தி செய்யுங்கள்.

எமது சமூகத்தையும் ஆரோக்கியப் பராமரிப்பாளர் குழுவையும் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கு உங்கள் பங்களிப்பினைச் செய்வதற்கு நாம் எமது நன்றியை உங்களுக்கு மீண்டும் தெரிவிக்கின்றோம்.

நீங்கள் நலமுடன் இருக்க வாழ்த்தும்,

Susan deRyk
Interim President and CEO
சுசன் டிரைக்
இடைக்காலத் தலைவர்,
பிரதம நிறைவேற்று அலுவலர்

Dr. Tony Stone
Chief of Staff
டாக்ரர் ரோனி ஸ்ரோன்
அலுவலர்கள் தலைவர்